Registered as a News Paper in Ceylon
P. M. G. No. H. A. 59/300 of 1953.

# இந்து சாதனம்

விரோதி ௵ (1889) ஆவணி 28௳ ஆரம்பமானது

வெள்ளி தோறும் வெளி வருவது

தனிப்பிரதி: சதம் 10

மாசில் வீணையும் மாலை மதியமும், வீசு தென்றலும் வீங்கிள வேனிலும், மூசுவண்டறை பொய்கையும் போன்றதே, ஈசனெந்தை யிணையடி நீழலே.


[புத்-௬௧] யாழ்ப்பாணம்:- ஏவிளம்பி ௵ கார்த்திகை ௴ ௨௧௨ வெள்ளிக்கிழமை (6 DCE 1957) [இல-௩௫]

# தமிழ்நாடு செய்த தவத்தால் அவதரித்த நாவலர்

## எமக்கு இயற்றி உதவிய நூல்கள்

### கற்றுக் கற்றபடி ஒழுகுதலே

## நாம் செய்யத்தக்க கைம்மாறு



திரு மு மயில்வாகனம், சமயப்பிரசாரஅமைச்சர் சை. ப. சபை

"நல்லைநக ராறுமுக நாவலர் பிறந்திலரேற்
சொல்லு தமிழெங்கே சுருதியெங்கே — எல்லவரும்
ஏத்தும் புராணுக மங்களெங்கே ப்ரசங்கமெங்கே
ஆத்த னறி வெங்கே யறை"

உலகில் ஞானிகள் நான் எனதென்னும் செருக்கற்று திருவருள்வழிநின்று ஒழுகுவார்கள். தாங்கள் பெறும் இன்பத்தை உலகிலுள்ள உயிர்களும் பெற வேண்டுமென்றெண்ணி வாழ்வார்கள். ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலரவர்கள் எங்கள் தமிழ்நாடு செய்த புண்ணியத்தின் பயனாக நம் ஈழநாட்டில் அவதரித்த பெரியாராவர். முற்கூறிய இலக்கணங்கள் பொருந்தியவர். அவருடைய பெருமைகளை எழுத்தினாலோ அல்லது வாயினாலோ கூற முடியாதெனக் காலஞ்சென்ற சைவப்பெரியார் திரு. சு. சிவபாதசுந்தரம்பிள்ளை அவர்கள் ஒருமுறை ஒரு கட்டுரையில் எழுதினார்கள்.

பெரியார்களைப் பற்றிச் சிந்திப்பதும் எழுதுவதும் பேசுவதும் சிற்றறிவுடைய எங்கள் மனத்தைப் பண்படுத்தி எங்கள் அறிவைப் பெருக்குதற்குத் துணையாகவிருக்கும். அதற்காகத்தான் மெய்ஞ்ஞானிகளுடைய குருபூசையைக் கொண்டாடும் மரபு எங்கள் நாட்டில் வழங்கி வருகிறது. ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலருடைய குருபூசை இவ்வருடம் கார்த்திகை மாதம் ௨௭-ந் திகதி (12-12-57) வியாழக்கிழமை நிகழவிருக்கின்றது. ஈழ நாட்டிலும் இந்தியாவிலும் உள்ள சைவ மக்கள் அவருடைய குருபூசையைப் பக்தி சிரத்தையோடு நடத்தக் கடமைப்பட்டுள்ளார்கள்.

எங்கள் சைவபரிபாலன சபை ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர் அவர்களுடைய திருவுள்ளத்தின்படியே அவருடைய மாணாக்கர்களாலும் சீடர்களாலும் 1888-ம் ஆண்டு நிறுவப்பெற்றதாகும். அதன் முதல் தலைவராக நாவலருடைய மருகர் வித்துவசிரோமணி பொன்னம்பலபிள்ளை அவர்களும் காரியதரிசியாக நாவலரவர்களுடைய தமையனார் புத்திரன் திரு த. கைலாசபிள்ளை அவர்களும் கடமையாற்றினார்கள். நாவலரவர்களுடைய சம்பந்தத்தை எங்கள் சபை அடைந்துள்ளதென்பதை விளக்குவதற்கு நாவலர் அவர்களுடைய ஞாபகமாக எங்கள் சபை சைவப்பிரகாசயந்திரசாலைக்கு அண்மையில் கல்லூரி வீதியில் நாவலர் ஆச்சிரமத்தை நிறுவி அதில் புராணபடனம், சைவப் பிரசங்கங்கள், சித்தாந்த வகுப்பு, தேவார வகுப்பு முதலிய சற்கருமங்கள் நிகழ ஒருங்கு செய்திருக்கின்றது.

சைவ சமயத்துக்கு வேதாகமங்கள் முதல் நூல்கள் என்ற உறுதியான கொள்கையுடையவர்கள் நாவலர் அவர்கள். அவை சிவபெருமானால் ஆன்மாக்கள் நற்கதி பெறவேண்டுமென அருளப்பெற்றதெனவும் தேவார திருவாசகம் முதலிய தமிழ்த் திருமுறைகள் ஆன்மபோதம் நீங்கிச் சிவபோதமடைந்த நாயன்மார்களாலும் பிறராலும் அருளிச் செய்யப்பட்டவையெனவும் அவர் கூறியுள்ளார். எங்கள் சபையும் அவருடைய கூற்றையே வழிகாட்டியாகக் கொண்டு தொண்டாற்றி வருகின்றது. நமது நாட்டிலேயுள்ள சைவச் சபைகளும் கோயிலதிகாரிகளும் மடாதிபதிகளும் வித்தியாசாலை அதிபர்களும் நாவலர் கருத்தியல்களை நன்குணர்ந்து தங்கள் தொண்டுகளைப் புரிவாராயின் சைவ வரம்பு பிறழாது சைவமுந் தமிழுந் தழைத்தோங்கும்.

நாவலர் அவர்கள் செய்த அரும் பெருந்தொண்டுகளுக்குக் கைம்மாறாக அவர்களுக்கு எங்களால் ஒன்றும் புரியஇயலாது. அவர் போதித்த போதனைகளின்படி நாங்கள் ஒழுகுவதே நாங்கள் அவருக்குச் செய்யக்கூடிய கைம்மாறாகும். சைவமக்கள் நாவலர் அவர்களுடைய நூல்களைப் பெற்றுப் படிக்க வேண்டும். சிறுவர்கள் தொடக்கம் முதியோர்களுக்கும் அவர்களுடைய நூல்கள் உதவும். சமயஒழுக்கம் ஆசார சீலம் அருகி நாட்டில் நாத்திகம் பெருகி வரும் இக்காலத்தில் நம்மவர்கள் அந் நூல்களைப் பெற்றுப் பயிலுதல் இம்மையில் இன்பத்தையும் மறுமையில் முத்தி யின்பத்தையும் மக்கள் அடைதற்குத் துணையாகவிருக்கும்.

அரசியல் அலை

# தேல்கியிலே சனநாயக வேதாந்தம் செப்புகின்றார் பிரதமர்!

## கொழும்பிலே அரசியற் கொந்தளிப்பைத் தடுக்க முடியவில்லை

### மாநகரசபையைக்கலைத்த மானபங்கம்

கொழும்புமாநகரம் ஒரு எரிமலைக்குச் சமானமாக அரசியற் குழப்பமென்ற வெப்பத்தை வீசிக்கொண்டிருக்கின்றது ஆனால் பிரதமர் பண்டாரநாயக இந்தியத் தலைநகரிலே வீரச் சொற்பொழிவாற்றி 'மனிதகுல சுதந்திரம்' என்ற பொருள்பற்றி வியாக்கியானம் செய்துகொண்டிருக்கின்றார். இதற்கிடையிலே இராணுவமும் கொழும்புமாநகரில் முக்கிய இடங்களைக் காவல் புரிந்துகொள்ள வேண்டி நேரிட்டிருக்கிறது. மாநகர சபையும் கலைத்துவிடப்பட்டது.

அண்டங்காகம் அரிசிக்காகத்தை நோக்கி நீ கறுப்பாய் இருக்கின்றாய் என்று எள்ளிக் கலைத்துவிட்டது போலிருக்கின்றது, மந்திரி சபையார்கொழும்புமாநகர சபை வேலை நிறுத்தத்தைச் சமாதானஞ் செய்ய முடியாத வகையில் ஆற்றலற்றது என்று பழிசுமத்தி மாநகரசபையைக் கலைத்து விட்டமை.

1956-ம் ஆண்டு சித்திரை மாதம் அரசியற் பொறுப்பேற்ற பண்டாரநாயக ஆட்சி இன்றுவரை எத்தனை கலகங்களை குழப்பங்களை வேலை நிறுத்தங்களை வில்லங்கங்களைத் தாங்க வேண்டி வந்திருக்கின்றதென்பதை ஆராய்ந்து பார்த்தால் அரசியல் அரங்கிலிருந்து இதுவரையில் அகற்றப்பட்டு அஞ்ஞாத வாசம் புகுந்திருக்க வேண்டுமே மக்கள் ஐக்கிய முன்னணி ஆட்சி என்று சொல்ல வேண்டி வரும்.

கொழும்புமாநகரசபைத் தலைவர் ஒரு ஐக்கியதேசியக் கட்சி அங்கத்தவர். அவர் மீது நம்பிக்கையில்லாத் தீர்மானத்தை மக்கள் ஐக்கிய முன்னணி கொண்டு வந்து தோல்வியடைந்து நாட்கள் பல கழிவதற்கு முன் 'வேலை நிறுத்தம்' என்ற முடச் சாட்டைக் கூறிக் கொண்டு

### வெள்ளத்தால் நட்டமடைந்தவர்களுக்குப் பூரண உதவி

வடமாகாணத்திற் பெருமழையால் நட்டமடைந்த மக்களுக்கு அரசாங்க அதிபரும் காரியாதிகாரியும் உடனுதவி செய்துள்ளனர். வீடுகளை இழந்தே பலர் கஷ்டப்படுவதால் அவர்களுக்கு அரசாங்கம் பூரண உதவியளிக்க வேண்டுமென்னும் பிரேரணை ஒன்றை யாழ்ப்பாணம் நகரசபை ஏகமனதாக அங்கீகரித்துள்ளது ஸ்ரீ ஏ. துரைராசசிங்கம் பிரேரிக்க ஸ்ரீ அல்பிரெட் துரையப்பா பிரேரணையை அநுவதித்தார்.

நகரசபையின் நியமனங்கள் நல்ல முறையில் நடைபெறும் வழி வகுக்கும் பிரேரணை ஒன்று முதலியார் சி. முத்துத்தம்பியாற் பிரேரிக்கப்பட்டு ஏகமனதாக ஏற்றுக் கொள்ளப்பட்டது.

பொறுப்பு வாய்ந்த மந்திரி சபை கொழும்புமா நகர சபையைக் கலைத்துவிட்டது. இச்செயலை ஐ. தே. கட்சியின் சென்மவிரோதியாகிய சமசமாசக் கட்சித் தலைவரே கண்டித்து, மக்கள் ஐக்கிய முன்னணி அரசுப் பொறுப்பைக் கைவிடமால் ஏன் இன்னும் தயங்கிக் கொண்டிருக்கின்றதென்று கேட்கின்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

THE SAIVAPRAKSA PRESS

திருச்சிற்றம்பலம்
வாழ்கஅந்தணர்வானவர் ஆனினம்
வீழ்க தண்புனல் வேந்தனுமோங்[குக
ஆழ்க தீயதெல்லாம்அர னாமமே
சூழ்க வையகமுந் துயர் தீர்கவே.
திருச்சிற்றம்பலம்

# இந்துசாதனம்

ஏவிளம்பி ஞூ கார்த்திகை மீ
உக வ வெள்ளிக்கிழமை

## மதி மயக்கமா?

'மக்கள் ஆட்சி' நடைபெறத் தொடங்கி மாதங்கள் இருபது கழிந்துவிடுவதற்குள் இந்நாடு எக்காலத்திலும் அநுபவித்தறியாத இன்னல்களாலே தாக்கப்படுவதைக் கண்டு மக்கள் மனங் கலங்குகின்றார்கள். அச்சம் கொள்கின்றார்கள்; அலமருகின்றார்கள். சனநாயகச் சமூக நலக் கொள்கை என்ற அரசியற்கொடியின் கீழ ஆட்சி நடத்தும் பண்டாரநாயக மக்களுக்கு அளித்திருக்கும் பயன் இதுதானு?

பொழுது புலர்ந்ததும் யார் வேலைநிறுத்தம்.......? எங்கே குழப்பம் எப்படியிருக்கின்றது நாட்டின் நிலை என்ற கேள்விகளைப் பொது மக்கள் கேட்க வேண்டியவர்களாயிருக்கின்றார்கள். இன்று புகைவண்டி ஓடுமா கடிதப் போக்குவரத்து இருக்குமா என்று சந்தேகங்கொள்ள வேண்டிய நிலையில் இருப்பதைத்தானும் ஊரவர்கள் பொருட்படுத்தாமல் விட்டாலும் உணவுப் பொருள்கள் இறக்குமதி செய்யப்படாதிருக்கின்றன, அவற்றுட் பல சேதம்அடைகின்றன, வாழ்க்கைக்குரிய பொருட்கள் விலையேற்றமாவதுமன்றிப் பெறுவதற்குமரியனவாகின்றன என்ற திகில் பிடித்தவர்களாய்க் கவலைப்படவேண்டியவர்களாய்ச் சஞ்சலப்படுவதுதான் பண்டாரநாயக ஆட்சியிற் பெற்ற பேறு!

அரசியற் புத்தியல் ஒன்றை ஆராய்ந்து கண்டிருப்பவர்கள்போன்று மக்கள் ஆட்சி மந்திரிமார்கள் கொழும்பு மாநகரசபைத் தொழிலாளர் நடத்திய வேலை நிறுத்தத்தைத் தோற்கடிப்பதற்காக அந்தச் சபையையே கலைத்துவிட உத்தரவு செய்திருக்கின்றார்கள். நாளுக்கு நாலுமுறை நாட்டில் வேலை நிறுத்தம் நடைபெறுவதைத் தடுக்க முடியாத பாராளுமன்றத்தைக் கலைக்க ஆணையிடுவதற்கு ஆள் இல்லையே! இந்த அரசியல் ஆதிக்க வெறியால் மதி மயங்கியிருக்கும் மக்கள் ஐக்கிய முன்னணி ஆட்சியாளர் தங்கள் அடாத செய்கைகளை ஏனைய கட்சிகள் யாவும் ஆட்சேபித்துக்கண்டிக்கின்றன என்றுகூட எண்ண முடியாத மயக்க நிலையிலிருக்கின்றார்கள்.

# உங்கள் நக்ஷத்திரம்? எங்கள் சோதிடம்

ஸ்ரீ ராதாகிருஷ்ணன் கணிப்பது.

[ இவ்வாரப் பலன்கள் 9—12—57 —— 14—12—57. ]

**மேடராசி அச்சுவினி, பரணி கார்த்திகை முதற்கால்.**

குடும்பக்கருமங்கள் தொடர்ந்து தளப்பமாகவே யிருக்கின்றன. பல வாக்குவாதங்களும் பிழை எண்ணங்களுமுண்டாகும் கந்தோரில் தொந்தரவுகளுக்கும் இடமுண்டு, ஆனல் அபாயமான விளைவுகளை எது ஒன்றும் உண்டாக்கமாட்டாது.

**இடபராசி கார்த்திகை 2, 3 4-ம் கால்கள் ரோகிணி, மிருகசீரிடம், 1, 2-ம் பாதம்,**

நீர் இந்தவாரம் அதிக எதிர்ப்பையும் கண்டனத்தையும் முன்னிட வேண்டிவரும். இரகசியப் பகைவர் மூலம் தெந்தரவுகளுக்கிடமுண்டு ஆனல் நீர் அவற்றை வெல்லக்கூடியதாயிருக்கும் தேகசுகம் விசேட கவனம் கொடுக்கப்படவேண்டும்,

**மிதுனராசி மிருகசீரிடம், 3, 4 திருவாதிரை, புனர்பூசம் 1, 2, 3, 1ம் பாதம்.**

உம்முடைய குடும்ப நிலைமைகள் திருந்தவேண்டும். தனலாபங்களும் போட்டியிடுவோரை வெல்லுதலும் நிச்சயம். நீர் சில புதுப் பொறுப்புக்களை ஏற்க வேண்டிவரும் ஆனல் அவை இன்பகரமானவையாயிருக்கும். உம்முடைய புதுத்திட்டங்களை முன்னேற்றுக.

**கடகராசி புநர்பூசம் 4ம் பாதம் பூசம் ஆயிலியம்.**

மாதா வழி இனத்தவர் மூலம் இந்தவாரம் தொந்தரவுகளுக்கிடமுண்டு அல்லது உம்முடைய தாயாருடைய தேகசுகம் பழுதாக்கக்கூடும், புதுமுயற்சிகள் சிறிது காலத்துக்குத் தாமதிக்கப்படும் சுகவீனங்களுக்கும் இடமுண்டு வயிற்றுக் கோளாறுகளுக்கிடமுண்டு.

**சிங்கராசி மகம், பூரம், உத்திரம் 1ம் பாதம்.**

ஒரு தளப்பமான வாரம். நீர் உமமுடைய நண்பர் சிலருடன் கோபிக்க வேண்டிவரும். அவமானங்களுக்கும் பிழை எண்ணங்களுக்கும் இடமுண்டு. புதியது எது ஒன்றையும் சிறிது காலத்துக்குத் தொடங்கவேண்டாம்.

**கன்னிராசி உத்திரம் 2, 3, 4ம் பாதம் அத்தம் சித்திரை 1, 2ம் பாதம்.**

பண நிலைமைகள் திருந்தும். நன்மையான சில புதுத்தொடர்புகளை நீர் உண்டாக்குவீர். பகைவர் அழிவும். புது முயற்சிகளிற் சித்தியும் நிச்சயம்.

**துலாம், சித்திரை 3 4ம் பாதம் சுவாதி விசாகம் 1, 2, 3ம் பாதம்.**

உமக்கு மனச் சமாதானமிருக்கமாட்டாது- நண்பர்கள் இனத்தவர்களிடையில் முரண்பாடுகளுக்கும்சண்டைகளுக்கும்இடமுண்டு. கண் நோய்களுக்கிடமுண்டு. இடைஞ்சல்களிலிருந்து நீங்க மாதாவழி இனத்தவர் உமக்கு உதவியாயிருப்பர்.

**விருட்சிகராசி விசாகம் 4.ம் பாதம் அநுஷம், கேட்டை.**

முதல் இருநாட்களும் உம்மை அதிகம் நிலைகுலைக்கும், உம்முடைய கருமங்கள் எல்லாவற்றிலும் நீர் கவனமாயிருக்க வேண்டும், சுகவீனங்களுக்கும் தேவையில்லாத செலவுகளுக்கும் இடமுண்டு.

**தனுராசி மூலம் பூராடம் உத்தராடம் 1ம் பாதம்,**

புதுக் கருமங்களுக்கு நல்லவாரம். ஆனல் செவ்வாய் புதனும் வியாழன் காலையும் கவனமாய்க் கழிக்கவும். வார மிகுதி திரும்பவும் நன்ருகும்.

**மகராசி உத்தராடம் 2, 3, 4ம் பாதம் திருவோணம் அவிட்டம் 1, 2ம் பாதம்.**

ஒரு தளப்பமானவாரம், வேலை கூடுதலாயிருக்கும். ஆனல் போதுமான இலாபத்தை நீர் பெறமாட்டீர் ஒரு சிறு பிரயாணத்துக்கு அறிகுறியிருக்கின்றது. வியாழம் பிற்பகல் வெள்ளி சனி கவனமாய்க் கழிக்கவும்.

**கும்பராசி அவிட்டம் 3, 4ம் பாதம், சதயம், பூரட்டாதி 1, 2, 3ம் பாதம்,**

ஒரு நல்லவாரம், உமக்கு அதிக மனச் சமாதானமுண்டாகும். பகைவர் அழிவுக்கும் இடமுண்டு. தனலாபங்களும் புது முயற்சிகளிற் சித்தியும் நிச்சயம். வாரத்தின் கடைசி நாளைக் கவனமாய்க் கழிக்கவும்.

**மீனராசி பூரட்டாதி 4, உத்தரட்டாதி ரேவதி**

ஒரு தொந்தரவான வாரம். சிறு அபாயங்களுக்கு அறிகுறியிருக்கின்றது. தேகசுகமும் பழுதாகக் கூடும். உம்முடைய நண்பரில் அதிகம் தங்கியிருக்க வேண்டாம்.

## நன்றி கூறுதல்

—0—

டொலஸ்பேச் "தாமரவல்லி குறாப்" சொந்தக்காரரான திரு. A, V. கிருஷ்ணபிள்ளை அவர்களும் அவரது பாரியாரும் தங்கள் புத்திரி திருவளர் செல்வி அற்புதஜோதிக்கும் திருவளர் செல்வன் சிவஇராசா நல்லையா (Son of the late Mr. R. R. Nalliah)வுக்கும் 1-12-57 ஊரெழு "கிருஷ்ண ஜோதி"யில் நடந்தேறிய திருமணத்தின்போது சமுகமளித்து மணமக்களை ஆசீர்வதித்த சுற்றத்தவர்களுக்கும் நண்பர்களுக்கும், இவ்வைபவத்திற்கென மங்கலப் பாக்கள் இயற்றுவித்து சங்கீத வித்துவான் ஆசிரியர் S, செல்வத்துரை மூலமாயும், செல்வன் P. தில்லையம்பலம் மூலமாயும் பாடுவித்த திருவாளர்கள் N. இராசலீங்கத்திற்கும், P. தில்லையம்பலத்திற்கும், இத்திருமண வைபவம் சிறப்புடன் நிகழ்வதற்குப் பேருதவியாயிருந்த திரு. வ. துரையப்பா அவர்களுக்கும் ஏனைய சுற்றத்தார்களுக்கும் நண்பர்களுக்கும் முறையே எங்கள் மனப்பூர்வமான நன்றியைத் தெரிவிக்கின்றோம்.

ஏ. 177 6-21-57

# வாழ்க்கை வானில்

—வளர்மதி

### தொழிற்றலைவருக்கு மாருன தொழிலாளர்

கொழும்பு வடபகுதிப் பாராளுமன்றத்து அங்கத்தவர் திருமதி விவியன் குணவர்த்தனவின் மோட்டார்வண்டியைக் குடையடித்த வண்ணம் கவிழ்த்துவிட்டவர்கள் யார்? தொழிலாளர்கள்! திருமதி குணவர்த்தன யார்—சமசமாசக் கட்சித் தலைவர்களில் ஒருவர். வேலை நிறுத்த வாடைக்காற்று கச்சானுக மாறி ஆளை ஆள் அறியாத வகையிற் குறித்த மோட்டார் வண்டியுடன் மோதியதா? அரசியற் காற்றுச் சுழன்றடிக்கின்ற இரகசியத்தை யார் அறிவார்?

---

அரசாங்கத்தில் உத்தியோகத்திலும் தொழில்களிலும் ஈடுபட்டிருப்பவர்கள் அடிக்கடி கொந்தளிக்கின்றார்கள். ஆகையால் அன்னருக்குச் சின்னஞ்சிறு உதவியைச் செய்துவிட்டாற் போதும். மாதாந்தம் வேதனமோ நாளாந்தம் வேலைக்குப் பணமோ பெறுகின்றவர்களைவிடப் பயிரிட்டுழைக்கின்றவர்கள் பலர் உளர். இவர்கள் கதியென்ன? அரிசிவிலை அதிகமென்று அல்லற்படுமிவர்களின் இன்னலைத் தீர்க்க முடியாதா? அரசியல் ஆதிக்கம் பெறுவதில் மதி மயங்கிய மக்கள் ஐக்கிய முன்னணி பொதுமககளின் நலனைப் பாதுகாப்பதற்கு உழைக்க முடியாதென்பது உண்மையே.

### துறைமுகத்தில் மறைமுக வேலைநிறுத்தம் இருக்கின்றதா?

இரண்டு மாதங்களுக்குள் குறைகள் தீர்க்கப்படல் வேண்டுமென்ற நிபந்தனைப்படி வேலை நிறுத்தம் கைவிடப்பட்டதாம். ஆனல் இன்னமும் கொழும்புத் துறைமுகத்தில் மறைமுகமாக வேலைநிறுத்தம் என்ற பூதம் உலாவிக்கொண்டிருக்கிறதாகவும் நம்பப்படுகிறதாம். வேலை நிறுத்தச் சமரச முடிவு வெற்றிக்கு யார் காரணர் என்ற விவாதமும் தொழிலாளர் சங்கங்களுக்கிடையில் நடைபெறுகின்றதாம். ஆதிக்கத்துக்கா தொழிலாளர்களின் நலனுக்கா இந்த வேலைநிறுத்தங்கள் நடைபெறுகின்றன என்ற கேள்வியைப்பற்றிப் பொதுவுடைமைக் கட்சித் தலைவர்களையும் சமசமாசக்கட்சித் தலைவர்களையும் விவாதத்துக்கு அழைத்தால் உண்மை புலப்படும்!

# உலக அழிவைத் தவிர்த்துப் பெரும் நலன் பெறும் வழி

"சமய உண்மைகளுக்கும், ஆன்மீகக் கொள்கைகளுக்கும் வாழ்க்கையில் உரிய இடம் அழித்தாலொழிய விஞ்ஞான முன்னேற்றத்தினுல் மனித சமுதாயம் முழுப்பலன் பெற முடியாது; அதுமட்டுமல்ல உலகையே அச்சுறுத்தும் அழிவிலிருந்து தப்பிக் கொள்ளவும் முடியாது"

"மனிதப் பூண்டையே ஒழித்து விடக்கூடிய ஆயுதங்கள் தங்கு தடையின்றி வளர்ந்துவிட்டன. அழிவுப்பேயின் கோர உருவ நிழலை மனித சமூகம் காணத் தொடங்கியுள்ளது. இந்த அபாய நிலையிலிருந்து தப்பிக்கப் புது வழி தேடும் முயற்சியில் மனித குலம் இறங்கியுள்ளது. இது நமக்கெல்லாம் மன நிறைவை அளிக்கிறது. இந்த அபாயத்திலிருந்து தப்பீத்து உயிர் வாழ ஒரேஒரு வழிதான் உண்டு; அதுதான் அகிம்சைநெறி; சத்தியநெறி. இந்த நெறிமட்டுமே மனிதனுக்கு உண்மையான அமைதியையும், மனமகிழ்ச்சியையும் அளிக்க முடியும்".

"இந்த உலகம் ஆயிரக்கணக்கான பேர்களைக் கண்டுவிட்டது. இனியாவது உலகில் ஆக்கிரமிப்பு நின்றுவிடுமென்று மனித சமுதாயம் நம்பியது. ஆனல் எதிர்பார்த்தபடி நடைபெறவில்லை. வன்முறை நடவடிக்கைகளை விட்டொழித்து, அகிம்சை வழியைக் கடைப்பிடித்து பலன்காண இது அல்லவா தக்க தருணம்? அகிம்சை நெறி ஊன்றி வளர நாம் செய்யும் முயற்சிகள் அனைத்தும் உலகிற்கு நன்மை பயக்கும். இந்த மாநாட்டின் நோக்கம் இத்தகைய அகிம்சை நெறி பரவச் செய்வதாகவே இருக்கவேண்டும்.

"மனிதனின் தனிப்பட்ட வாழ்க்கையிலும் சரி, சமுதாய வாழ்விலும்சரி, சமயம் இன்றியமையாத ஒன்று மட்டுமல்ல, தவிர்க்க முடியாததுங் கூட. உண்மையான சமயத்தின் உள்ளுணர்வை மனித உள்ளம் எப்பொழுதுதொடுகிறதோ அப்பொழுது ஒருவர்மீது மற்றொருவர் அவநம்பிக்கை காட்டுவதுடன் வீண் குழப்பங்களும் சச்சரவுகளும் மறைந்துவிடும். இப்பொழுது மனித சமுதாயத்தில் சமத்துவ உணர்ச்சி தலை தூக்கியுள்ளது. ஒவ்வொரு மனிதனும் மற்றவரைத் தனக்குச் சமமானவரே எனக் கருதக்கூடிய நிலை தோன்றியுள்ளது. ஆன்மீக வாழ்க்கைக்கண்ணேட்டமும் இதுவே ஆகும். ஆன்மீக நெறிப்படி, இந்தச் சமத்துவ உணர்ச்சிக்கு வேறு பெயர் இருக்கலாம். மனிதன் வாழ்க்கையை எந்தக் கண்ணேட்டத்துடன் அணுகுகின்றான் என்பதைப் பொறுத்தே அவனுடைய மன அமைதியும், இன்பமும் அமைந்திருக்கும். இந்த உண்மையை அனைவரும் தெளிவாக உணர வேண்டும். ஆனல் இப்படிச் சொல்லும்பொழுது, உலக சுகத்தையும் செல்வ வளத்தையும் துறந்துவிட வேண்டும் என நான் கூறுவதாகப்

தொடர்ச்சி 5-ம் பக்கம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருக்கார்த்திகைச் சிந்தனை

———o———

### தேவாரம்



பட்டி யேறுகந் தேறிப் பலவிவ
மிட்ட மாகவி ரந்துண் டூழிதரும்
**அட்ட மூர்த்தியண் ணாமலை** கைதொழக்
கெட்டும் போம்வினை கேடில்லை காண்மினே.

— திருநாவுக்கரசர்

ஆலயம் முதலிய சிவசந்நிதானங்களிலும், பூசையிலும் யாகாதிகளிலும் விளக்கிடுதல் மகாபுண்ணியமாம். சோடச உபசாரங்களுள் விளக்கிடுதலும் ஒன்றாம் விளக்கிடுதல் சரியைத் தொழில்களுள் விசேடித்ததாகச் சொல்லப்பட்டது. சிவபெருமானுக்கு முப்பத்திரண்டு உபசாரங்களோடு பூசைசெய்க. அவை யிலவாயிற் சோடசத்திற் பூசிக்க. அதுவுங் கூடாதவர் சந்தனம், புட்பம், தூபம், தீபம், நைவேத்தியம் என்னும் பஞ்சோபசாரங்களோடு பணிதல் விதி. அதுவுஞ் செய்ய இயலாதார் முடிவிற் செய்யப்படும் தீபமாத்திரம் ஏற்றித் 'தலையாரக் கும்பிட்டுக் கூத்துமாடிச் சங்கரா சய போற்றி' என்னக் கடவர் என்று காமிக ஆகமம், இலளிதாகமம் முதலிய மூதனூல்களுரைக்கின்றன. இதனால் தீபத்தின் பெருமை யித்துணைத்து என்பது தெற்றெனப் புலப்படுகின்றது.

x x x x

தீபமாலை, தீபங்கள் என்னுமிவற்றால் பிரகாசிப்பித்தல் சிவவழிபாட்டிற்கு இன்றியமையாததாகும். தீபமாலையாவது கபிலநிறப் பசுவின் நெய்யினால் நிறைக்கப்பட்டது. கர்ப்பூரம், அகில் என்னும் இவற்றோடு சம்பந்தமாகத் திரிக்கப்பட்ட இழைகளையுடையதும் அவியாததும் வட்டவடிவாகிய தோரணம் முன்னர்த் தூங்கப்பெற்றதும் திரிசூலவடிவாகச் செய்யப்பட்டதுமாயுள்ளது.

— மகாவித்துவான் நா. கதிரைவேற்பிள்ளை

### தேவாரம்

உடம்பெனு மனையகத்துள்
உள்ளமே தகழியாக
மடம்படு முணர்நெய்யட்டி
யுயிரெனும் திரிமயக்கி
யிடப்படு ஞானத்தீயால்
எரிகொள விருந்து நோக்கிற்
கடம்பமர் காளைதாதை
கழலடி காணலாமே.
விளக்கினுர் பெற்றவின்ப
மெழுக்கினுற் பதிற்றியாகும்
துளக்கினன் மலர்தொடுத்தாற்
றூயவிண் ணேறலாகும்
**விளக்கிட்டார் பேறுசொல்லின்**
**மெய்ந்நெறி ஞானமாகும்**
அளப்பில கீதஞ் சொன்னார்க்
கடிகடா மருளுமாறே.

— திருநாவுக்கரசர்


**சைவபரிபாலனசபை வெளியீடு**

**கல்விப் பொதுத் தராதரப் பத்திரத்**

**தேர்வுக்குரிய நூல்கள்**

[ G. C. E. ]

**இலக்கியம்**

கும்பகருணன் வதைப்படலம் (செய்யுள் 1—170)
உரையாசிரியர் : வித்துவான், பண்டிதர் சைவப்புலவர் க. வேந்தனார் அவர்கள். விளக்கவுரை, தேர்வுவினாக்கள் முதலியவற்றுடன். விலை ரூபா 3–00

**சைவ சமயம்**

பதிப்பாசிரியர்: பண்டிதர் ம, வே. திருஞானசம்பந்தப்பிள்ளை

திருவருட்பயன் விளக்கவுரையுடன்
உரை ஆசிரியர் சு. சிவபாதசுந்தரம் அவர்கள் B. A. விலை சதம் — 75.

திருக்குறள் மூலமும் உரையும் (25 — 34)
ஆங்கில மொழிபெயர்ப்புடன் விலை சதம்—75

சமயகுரவர் சந்தானகுரவர் சரித்திரச் சுருக்கம் ,, ,, —75

தேவார திருவாசகத்திரட்டு உரையுடன் விலை சதம்—65


# சைவ சமயக் கல்வி

## மாணிக்கவாசகர்

( பதிப்புரிமை )

### புத்தரை வாதில் வெல்லுதல்

அரசன் அருகிலிருந்த புத்த குரு வெகுண்டு 'புத்தரைவிட உயர்ந்த தெய்வம் வேறில்லை. நான் இப்பொழுதே தில்லைக்குச் சென்று அங்குள்ளவரை வாதில் வென்று நாடெங்கும் புத்தநெறியைப் பரப்புவேன். மூன்று நாட்களில் பொன்னம்பலத்தைப் புத்த பள்ளியாக்குவேன்" என்று சூளுரைத்துப் புறப்பட்டார். அரசன் தன் ஊமைமகளை உடனழைத்துக்கொண்டு புறப்பட்டான். மகளின் ஊமைத்தன்மை தில்லையில் நீங்குமென்றுநினைத்தான். யாவரும் தில்லையடைந்து பொன்னம்பலத்தினருகிலிருந்த மண்டபத்தில் தங்கினர்.

தில்லைத் திருக்கோயில் மண்டபத்தில் புத்தகுரு வாதத்திற்கு வந்திருப்பதைச் சோழ மன்னனுக்கும் பிறர்க்கும் தில்லைப் பதியினர் தெரிவித்தனர். தில்லை வாழந்தணர் கனவில் சிவபெருமான் தோன்றி வாதவூரன் வாதில் வெல்வான். அவனிடம் சென்று கூறுமின்" என்றருளினார். மறுநாள் மறையவர் வாதவூரரிடம் சென்று உரைத்தனர். அவர் அரனருளை எண்ணி அம்பலம் அடைந்தார். சோழமன்னனும் புலவர் பலரும் அங்குக் குழுமினர். ஈழ நாட்டரசன் சோழனை வணங்கி அருகிலமர்ந்தான். தில்லை வாழந்தணரும் சிவனடியார்களும் பொதுமக்களும திரண்டிருந்தனர்.

புத்தகுரு தம் மதக் கொள்கைகளைக் கூறினார். அதிலுள்ள குறைபாடுகளை வாதவூரடிகள் எடுத்துரைத்தார். அதற்கு விடைகூற முடியாத புத்த குரு சிவபெருமானைப்பற்றிப் பரிகாசமான சில கேள்விகளைக் கேட்டார். திருவாதவூரர் புத்தகுருவின் நாவிலிருந்து நீங்குமாறு நாமகளுக்குப் பணித்தார். உடனே புத்த குருவும் அவரைச் சார்ந்தவர்களும் ஊமையராயினர். அதைக் கண்டஞ்சிய ஈழ நாட்டரசன் தன் மகள ஊமைத் தன்மையைப் போக்குமாறு வாதவூரடிகளை வேண்டி வணங்கினான்.

மாணிக்கவாசகர் இறைவனை வேண்டி அப்பெண்ணின் ஊமைத் தன்மையைப் போக்கினார். புத்த குருவின் வினாக்களுக்கெல்லாம் அவளையே விடை கூறச்செய்து 'திருச்சாழல்' என்னும் திருவாசகப் பகுதியைப் பாடியருளினார். ஈழ நாட்டரசன் மணிவாசகரை வணங்கித் திருநீறு பெற்றணிந்து சைவனானன். அவ்வரசன் வேண்டுகோளின்படி வாதவூரர் புத்த குரு முதலியோர் ஊமைத் தன்மையையும் நீக்கியருளினார். அவரனைவரும் சைவ சமயத்திற் சேர்ந்தனர்.

### அம்பலவாணர் எழுத்து

புத்தரை வாதில் வென்ற மாணிக்கவாசகர் சிதம்பரத்தில் திருவாசகம் பாடிக்கொண்டிருந்தபோது அம்பலவாணர் சைவ அந்தணராய் வடிவங்கொண்டு வாதவூரடிகள் தங்கியுள்ள குடிலை அடைந்து அவரெதிரில் நின்றார். தாம் இருப்பது பாண்டி நாடென்றும் புத்தநெறியை வென்றது பற்றி அந்நாட்டினர் மகிழ்வதாகவும் இவர் பாடிய பாடல்களை எழுதிக் கொள்ள வந்ததாகவும் கூறினார். மாணிக்கவாசகர் திருவாசகத்தைக் கூற அம்பலவாணர் ஏடும் எழுத்தாணியும் கொண்டு எழுதி முடித்தார்: பின் தில்லைக் கூத்தரைத் தலைவராகக் கொண்ட அகப்பொருள் கோவை ஒன்று பாடுமாறு வேண்டினார். 'திருச்சிற்றம்பலக் கோவையை வாதவூரர் கூற அதையும் எழுதி முடித்த பின் புத்தகத்துடன் மறைந்தருளினார்.

தம் நூல்களை எழுதியவர் பொன்னம்பலவரே என்றறிந்த மாணிக்கவாசகர் திருவருளை நினைந்து போற்றினார். வியந்தார். அம்பலவர் தாம் எழுதிய நூல்களை வாதவூரர் கூற அம்பலவன் எழுதியது' எனத் தம் திருக்கைச்சாத்தும் இட்டுப் பொன்மன்றின் திருப்படியிலே வைத்தருளினார். மறுநாட் காலை வழிபட வந்தவர் கண்டு அனைவர்க்கும் கூறத் தில்லை வாழந்தணரும் பிறரும் அதைக் கண்டு வியந்து பிரித்துப் பார்த்தனர்.

திருவாசகத்தில் உள்ள அகவல் நான்கும் திருச்சதகம் முதலாகவுள்ள அறுநூறு திருப்பாடல்களும், திருக்கோவையார் பாடல் நானூறும் படித்துத் திருச்சிற்றம்பலமுடையார் கைச்சாத்தும் கண்டு இதுவே வீடுபேறளிக்கும் உண்மை மறை என உணர்ந்தனர். அச்சுவடியுடன் மாணிக்கவாசகர் இருப்பிடம் சென்றனர். அவரிடம் நிகழ்ந்தது கூறிச் சுவடியைக் கொடுத்தனர். இறைவர் மறையவராய் வந்து எழுதிய செய்தியை வாதவூரர் கூறக் கேட்ட அனைவரும் அம்பலவர் அருளை வியந்து போற்றினர். திருவாசகத்துக்குப் பொருள் விளக்குமாறு மாணிக்கவாசகரை வேண்டினர். அம்பலவர் திருமுன் சென்று அறிவிப்பதாக அவர் கூறினார்.

### திருவாசகப் பொருள் சிவபெருமானே

அனைவரும் பின் செல்ல வாதரடிகள் அம்பலக்கூத்தர் திருமுன்பு அடைந்தார். திருநடம் கும்பிட்டார். கண்ணீர் ஒழுகக் கூப்பிய கையராய் உள்ளே சென்றார். "இம் மெய்ம் மறையின் பொருள் அம்பலவாணராகிய இவரே" என்று கூறி அவர் திருவடியில் சேர்ந்தார்.

தொல்லை யிரும்பிறவிச் சூழுந்தளை நீக்கி
அல்லலறுத் தானந்த மாக்கியதே — எல்லை
மருவா நெறியளிக்கும் வாதவூர் எங்கோன்
திருவாசக மென்னுந் தேன்"

"பெருந்துறை புகுந்து பேரின்ப வெள்ளம்
மூழ்கிய புனிதன் மொழிந்த வாசகமே
வாசகம் அதற்கு வாச்சியம்
தூசகல் அல்குல வேய்த்தோள் இடத்தவனே.

வாட்டமிலா மாணிக்க வாசகநின் வாசகத்தைக்
கேட்ட பொழுதங் கிருந்த கீழ்ப்பறவைச் சாதிகளும்
வேட்டமுறும் பொல்லா விலங்கினமும் மெய்ஞ்ஞான
நாட்டமுறுமென்னில் அங்குநானடைதல்வியப்பன்றே"


**ஈச்சுர நிச்சயம்**

——::——

யாழ்ப்பாணத்துக் கொக்குவில்,
குகதாசர்
**ச. சபாரத்தினமுதலியார் அவர்கள்**
எழுதியது

திருமயிலை
சே. வெ. ஜம்புலிங்கம்பிள்ளை பதிப்பு.

விலை ரூபா: 3-50.

கிடைக்குமிடம்:
மனேஜர், "இந்துசாதனம்"
வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம்.

M. 102, 6, 13, 20-9-57.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ் வளர்ச்சி

[கச்சியம்பதி, வித்துவான் திரு. மே. வீ. வேணுகோபால பிள்ளை அவர்கள் 'சென்னை மாணவர் மன்ற வெள்ளிவிழா மலரில் 'தமிழ் வளர்ச்சி' என்னும் பொருள்பற்றி அரிய கட்டுரை ஒன்று எழுதியுள்ளார்கள். அதன் ஒரு சிறு பகுதி வருமாறு.]

எங்கும் தமிழ் முழக்கம் கேட்கிறது! 'வாழ்க தமிழ்' என்று இளஞ் சிறுரும்முழங்குகின்றனர். இது தமிழுக்கு மீண்டும் நற்காலம் பிறக்கிறது என்பதற்கு நல்லறிகுறிதான் என எண்ணி மகிழ்கிறோம்! ஆனல், கற்பாரின்றி - கற்பிப்பாரின்றி - போற்றுவாரின்றி - புனைவாரின்றித் தமிழ் எவ்வாறு தழைத்தோங்கும்? ஒலியளவாய் உருக்கொண்ட தமிழர் நல்லெண்ணம், செய்லளவில் உருக்கொள்ளவேண்டாவா? விளம்பரப் பலகைகளெல்லாம் கொட்டை எழுத்தில் தமிழணங்கின் சிதைந்த சொற்களைத்தானே விளம்பரஞ் செய்கின்றன? பட்டம் பெற்ற "அருணஜலங்களும், வெங்கிடாஜலங்களும், றெங்கஸ்வாமிகளும், திருவாங்கிடங்களும், பிரும்மணர்களும், ஹோட்டல்களும்" இன்றும் காட்சியளித்துக்கொண்டுதானே இருக்கின்றன! தெருப் பெயர் திருத்தமறப் பொறிக்கப்பெற்ற பலகைகள் இன்றும் தமிழ் நாட்டில் திகழ்ந்துகொண்டுதானே வருகின்றன!

ஆயிரக்கணக்கிலேஅச்சுவாகனமேறி வெளி வரும் தமிழ்ச் சுவடிகளிலும் நாட்செய்தித் தாள்களிலும் இன்னும் அம்மைத்தழும்புகள் அகன்றபாடில்லையே! பேச்சிலும் எழுத்திலும் பிழைபட்ட சொற்களல்லவா இன்றும் நாம்கேட்டு வருவனவும் பார்த்து வருவனவுமாய் உலவுகின்றன? வெட்கம்! வெட்கம்!

அருந் தமிழ் அன்னைக்கு ஆக்கம் அளிக்க விரும்பும் அன்பர்களே!

"ஒல்லும் வகையால் அறவினை
ஓவாதே
சொல்லும் வாய் எல்லாம்
செயல்"

என்னும் வள்ளுவர் வாய்மொழியை உள்ளத்திற்கொண்டு, எங்கும் தமிழ் மொழி தழைத்தோங்கற்கான செயல்களில் அனைவரும் ஊக்கம் காட்டுங்கள்.

நகரின் பல இடங்களிலும் மாலை நேரப் பள்ளிகள் அமைத்துத் தமிழ் கற்கும் வாய்ப்பிழந்தார்க்கு நல்லாசிரியர்களைக் கொண்டு தமிழைக் கற்பிக்க வழிகோலுங்கள்ஒவ்வொரு சிற்றூரிலும் 'நற்றமிழ் நூல் நிலையங்'களை நிறுவிச் சிறுவர், சிறுமியர், இளைஞர், முதியர், பெண்டிர் ஆகிய அனைவரும் ஒவ்வொரு நாளும் நூல்நிலையத்திலுள்ள நூல்களை வாங்கி ஓய்வு நேரத்திற் படித்துப் பயனடையும் பழக்கத்தை ஏற்படுத்துங்கள். நாட்டின் நலங் கருதுஞ் செல்வர்கள் தங்களால் இயலுமளவு பொருளுதவி செய்து இவ்வாக்க வேலை இடையீடின்றி நடைபெறச் செய்யுங்கள்.

கல்விக் கழகங்களில் தமிழ்த் தொண்டு மேற்கொண்டுள்ள தமிழாசிரியர்களின் மதிப்பைப் பலவகையாலும் உயர்த்த முயலுங்கள். பதிப்பகங்களில் நல்ல தமிழ்ப்பயிற்சி பெற்றுள்ள அறிஞர்களை அமர்த்தி அச்சேறும் சிறு விளம்பரத்தாள் முதல் கலையாக்கங் கருதி வெளியிடும் நூல்கள் இறுதியாக அனைத்தும் பிழையறப் பார்வையிடச் செய்து வெளியாக்குங்கள்

இன்னும் அறிஞர்கள் எவ்வெத் துறைகளிலெல்லாம் தமிழுக்கு ஆக்கந் தேட இயலுமோ, அவ்வத் துறைகளிலெல்வாம் ஆக்கந் தேடுவதைத் தமது உயரிய கடமையாகக் கொண்டு பணியாற்றினலன்றித் தமிழ் வளர வழியுண்டாகாது.

---

# ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் நினைவு

( 12—12—57 )

நாவலர் நன்னாள் கார்த்திகைத் திங்களில் வருகின்றது தமிழ் உலகம் அபபெரியாரின் நாளைக கோண்டாடுகின்றது. "செயற்கரிய செய்வர் பெரியர்" என்பதற்கு இலக்கியமாய் விளங்கியவர் நாவலர்; சைவத்தையும் தமிழையும் வளர்த்தவர் நாவலர். நாட்டின் நலத்திற்காக உணர்ச்சியுடன் தொண்டாற்றியவர் நாவலர். வசனம் தழைக்க வழி வகுத்தவர் நாவலர்.

தமிழகத்திலுள்ள கழகங்களும், கல்வி நிலையங்களும் நூல்நிலையங்களும் இப்பெரியாரின் திருநாளைக் கொண்டாடுதல் வேண்டும்.

தமிழ் உலகில் நாவலர் என்று சொன்னல், அது 'யாழ்ப்பாணத்து நல்லூர் ஆறுமுகநாவலர்' அவர்களையேகுறிக்கின்றது. இலங்கைக்கு வந்து செல்லும் தென்னிந்தியத் தமிழ்ப் பெரியார் சைவத் திருநெறியும் செந்தமிழும் இலங்கும் யாழ்ப்பாணத்திற்கு வராமற் போவதில்லை; மேலும் 'நாவலர் பிறந்த நாட்டுக்கு வந்தோம்' என்று கூறி மகிழ்வர். நாவலர் காலத்து யாழ்ப்பாணத்தின் - இலங்கையின் - தமிழகத்தின் - சைவ உலகின் நிலையினை நன்கு உணர்ந்தவரே நாவலர் பெருமையினை அளக்க வல்லராவர்.

"நல்லை நகர் ஆறுமுக
நாவலர் பிறந்திலரேற்
சொல்லு தமிழ் எங்கே
சுருதி எங்கே?

என்று இயம்பினர் தமிழ் வளர்த்த தாமோதரனர்.

"பன்னூற் கடல் கடைந்து
பாலர்பெற இன்னமுதச்
சொன்னடி நல்வசன
சூத்திரமாச் சின்னளில்
இத்தரையில் யாவர்செய்வார்
எள்ளப் பலப்பலவாம்
புத்தகங்கள் செய்தருளும்
புண்ணியனே"

என்றுபோற்றினர் புலவர் அ. குமாரசுவாமிப் புலவர்.

"கல்வியிற்பெரிய சொன் வன்மையினேன்" என்னப் புகழ்ந்தனர் சோடசாவதானம்சுப்பராயச்செட்டியார்.

புனிதத்தமிழைப்போற்றி வளர்த்தவரும், விரிந்த மனப் பான்மையோடு தனித் தமிழுக்கு - பாண்டியன் பைந்தமிழுக்கு அடிகோலியவரும் பன்னூலாசிரியருமாகிய 'பரிதிமாற் கலைஞன்' சூரிய நாராயண சாஸ்திரியார் "வசன நடை கைவந்த வள்ளலார்" என்று போற்றுவாராயினர்.

இப்படிப்பட்ட பெரியாரின் திருநாளை நாம் ஆண்டு தோறும் கொண்டாடுதல் வேண்டும். இளைஞரின் உள்ளத்தில் உணர்ச்சி உதிக்கச்செய்தல்வேண்டும்.

'தமிழ் வளர்ச்சி' 'தமிழ் வளர்ச்சி' என்று வாளா சொற்ருெண்டு புரிவதால் ஆவது ஒன்றுமில்லை. சொற்பொழிவுகள்எல்லாம் பொருட் பொலிவுகளாக அரும்பி மலர வேண்டும்.

இப் பெரியார் பிறந்த ஊர் 'ஈழ நாட்டுக் கம்பர்' ஆகிய அரசகேசரியார் வளர்த்த தமிழ் சங்கம் இருந்த நல்லூராம் நல்லூர். இஃது அரசகேசரியின் மாமனாராகிய பரராசசேகர மன்னர் அரசு வீற்றிருந்த அணிநகர்.

நாவலர், சைவ சித்தாந்த [illegible] ஞான சித்தியாருக்கு உரை கண்ட அறுவருள் ஒருவரும், வடமொழி தென்மொழியும் வேதாகமங்களும் நன்கு பயின்று, சித்தாந்த சிகாமணி முதலிய வடமொழி நூல்களும் பிறவும் இயற்றியவருமாகிய (யாழ்ப்பாணம், திருநெல்வேலி)

**ஆசிரியர்**
**மா. பீதாம்பரன்**

ஞானப்பிரகாச முனிவரின் மரபிற் பிறந்தவர். இவர் தந்தையார் கந்தப்பிள்ளை, தாயார் சிவகாமிஅம்மையார். இவர் பிறந்த ஆண்டு கிறிஸ்தாப்தம் 1822.

போர்த்துக்கீசராலும் ஒல்லாந்தராலும்வாடிவதங்கிய சைவமும் தமிழும் தழைத்தோங்குமாறு தோன்றிய நாவலர் பழந் தமிழ் மரபின்படி நல்லாசிரியரிடத்தே தமிழ் நூல்களை நன்கு பயின்று புலமை எய்தியதனேடு வடமொழியும் ஆங்கிலமும் பயின்று மும்மொழிகளிலும் வல்லுநராய் விளங்கினர்.

சைவத்தையும் தமிழையும் வளர்த்தற்குச் சிறந்த கருவிகள் சைவப் பாடசாலைகளே என்பதை நன்கறிந்த நாவலர், யாழ்ப்பாணத்தில் (வண்ணர்பண்ணையில்) ஒன்றும், சிதம்பரத்தில் ஒன்றுமாக இரண்டு சைவப்பாடசாலைகளை நிறுவினர். அவை இன்றும் நிலவுகின்றன.

சைவபரிபாலன சபையும், இந்துக் கல்லூரியும் நாவலர் உள்ளத்தெழுந்த எண்ணத்தினல் உருவாக்கப்பட்டனவேயாம்.

நாவலரவர்கள் இவற்றோடு நின்றுவிடாமல், சென்னையில் வித்தியாநுபாலன யந்திரசாலை' எனப் பெயரிய அச்சகம் ஒன்றனை நிறுவி செந்தமிழ்ச் சைவ நூல்கள் பலவற்றை இயற்றியும் பிழைமலிந்திருந்த பல நூல்களைத் திருத்தியும் பதிப்பித்தார்கள். அவர் பதிப்பித்த நூல்களையே தமிழகம் பெரிதும் விரும்பிற்று. நாவலர் பதிப்பு என்ருல் அதற்கு ஓர் தனி மதிப்பு. அவர் பதிப்பித்த நூல்களிற் பிழைகள் இரா.

நாவலர் ஆற்றிய சைவத் தொண்டினையும், தமிழ்த் தொண்டினையுமே பெரும்பாலோர் அறிவர். அவர் தேசத் தொண்டராயும் விளங்கினர். அரசியற் கூட்டங்களிலும் அஞ்சா நெஞ்சுடன் பிரசங்கமாரி பொழிந்தார். நீதியினின்றும் திறம்பிய உத்தியோகத்தர்களின் செயல்களை ஊன்றிக் கண்டித்தார்.

நாவலர் இறுதிக்காலம் வரை இல்லற வாழ்க்கையிற் புகாமல், ஒழுக்க நெறியிலே தலைசிறந்தவராய் தமிழ் வளர்ச்சிக்கும், சைவ சமய வளர்ச்சிக்கும், தம் உடல், பொருள், ஆவி மூன்றையுந் தத்தஞ்செய்து வேண்டுவன புரிந்தார். இறுதியில் அவர் தமது 57-ம் வயதில் யாழ்ப்பாணத்தில், தமது இல்லத்தில் 1879-க்குச் சரியான பிரமாதி ஆண்டு கார்த்திகைத் திங்கள் 21-ம் நாள் வெள்ளிக்கிழமை பூதவுடலை நீத்துப் புகழுடப்பெய்தினர்.

"ஆடுந் தில்லை அம்பலவன்
அடிகள் மறவா அன்புடை
[யோன்
பீடு பெறவே செந்தமிழைப்
பேணி வளர்த்த பெரும்புல
[வன்
நீடு சைவம் இவ்வுலகில்
நிலவச் செய்த குருநாதன்
நாடு புகழும் ஆறுமுக
நாவலன் பேர் மறவோமே"

—கவிமணி
சி. தேசிகவிநாயகம்பிள்ளை

---

இலங்கையில்

# வடமொழித் தேர்வுகள்

———:0:———

பாரத சனதிபதி டக்டர் ராஜேந்திரப்பிரசாத் அவர்களைத் தலைவராகச் சம்ஸ்கிருத விஸ்வ பரிஷித் என்னும் அகில உலக வடமொழிக் கழகத்தால் திட்டமிடப்பட்டு, உத்தரப் பிரதேச முன்னைநாட் தேசாதிபதியும் பிரசித்தி பெற்ற நூலாசிரியருமான ஸ்ரீ கே. எம். முன்ஷி அவர்களைத் தலைவராகக கொண்ட பாரதீய வித்தியா பவனம் என்னும் ஸ்தாபனத்தால் நடாத்தப்படுகின்ற ஆரம்ப சம்ஸ்கிருத பரீட்சைகள் வருகிற ஆண்டு தொடங்கி இலங்கையிலும் நடைபெறுவதற்கான ஒழுங்குகள்செய்யப்பட்டிருக்கின்றன! ஆங்கில மூலமாகவும் தமிழ் மூலமாகவும் பரீட்சைகள் நடாத்தப்படும். வடமொழி பயிற்றும் ஆசிரியர்கள், தங்கள் மாணவர்களை இத்தேர்வுகளுக்குத் தோற்றச் செய்து அவர்களின் வடமொழியார்வத்தைத் தூண்டுவார்களாக.

பிராரம்ப, பிரவேச, பரிசய, கோவித என்னும் பெயருடைய ஆரம்ப பரீட்சைகள் ஆண்டில் இருமுறை பங்குனி புரட்டாதி மாதங்களில் நிகழும். கோவித என்னும் நான்காவது தேர்வு இலங்கைக் கல்விப் பகுதியின் ஜீ. ஸி. ஈ. தேர்வுக்கு நிகரானது. பாடப் புத்தகங்கள் மிகச் சிறியன. பரீட்சை முறையும் இலகுவானது. இப் பரீட்சை நடத்துவதற்கான ஏற்பாடுகள் செய்துள்ளவர் பண்டிதர் ச. ப. சர்மா (ஸ்ரீ சோமாஸ்கந்தக் கல்லூரி, புத்தூர்) அவர்களாவர்.

---

## விண்ணப்பப் பத்திரம்

**'இந்துசாதன இளைஞர் கழகம்'**

இந்துசாதனக் காரியாலயம்
**யாழ்ப்பாணம்**

அன்பு கூர்ந்து என்னை 'இந்துசாதன இளைஞர் கழகத்திற் சேர்த்துக்கொள்ளுமாறு வேண்டுகின்றேன்.

முழுப்பெயர்..........................................................
வகுப்பு .........பிறந்த திகதி.............................
விலாசம் ..........................................................
..........................................................
கையெழுத்து ..........................................................
திகதி ..........................................................

தந்தையாரின் /
ஆசிரியரின் கையெழுத்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கோட்டு விற்பனவு விளம்பரம்

——0——

யாழ்ப்பாணம்
டிஸ்திறிக் கோட்டில்

காரைநகர் மேற்கு வயித்திலிங்கம் காசிப்பிள்ளை —வழக்காளி
இல 11862.

எதிராக

சங்கானை தற்போது இல 109 கஸ்தூரியார் ரேட் யாழ்ப்பாணம் பொன்னம்பலம் கணபதிப்பிள்ளை எதிராளி.

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டின் 11862ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக்கட்டளைப்படி பின்னுல் விபரிக்கப்படும் ஐந்து துண்டுக் காணிகள் 1958ம் ஹூ தை மீ 8ம் திகதி புதன்கிழமை முற்பகல் ஒன்பது மணி தொடக்கம் அந்தந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத்தொகை:—முதல்வட்டி ரூபா:5507 83 சதம் ரூபா 5500க்கு 28-10-54 தொடக்கம் 21-12-54 வரை 6 வீதமான வட்டியும் அதன் மேல் முழுத்தொகைக்கும் இறுக்கும்வரை 5 வீதமான வட்டியும் கோட்டுச்செலவு ரூபா 286-24 சதம்-இதில் ரூபா 1300 கொடுபட்டது.

### காணிகளின் விபரம்

1. வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் வலிகாமம் மேற்குப்பகுதி பண்டத்தரிப்புக் கோவிற்பற்று பண்டத்தரிப்பு இறை "விளாப்புவயல்" பர. நெ. இல பத்து (10) கிழக் கெல்லைக் காணியிலிருக்கும் கிணற்றுப்பாகமும் வழிவாய்க்கால் பாவிப்புரிததும் எல்லை கிழக்கு தம்பாபிள்ளை பெண் அன்னம்மாவின் உரித்தாளர்கட்குரிய வாதனமும் கீழ்க்காணும் இரண்டாம் ஆதனமும் வடக்கு சின்னத்தம்பி தாமோதரம்பிள்ளைக்கும் பங்காளர்கட்குமுரியவாதனம் மேற்கு கீழ்க்காணும் மூன்ரும் ஆதனம் தெற்கு பொன்னம்பலம் முருகேசுவிற்கும் தம்பாபிள்ளை பெண் அன்னம்மாவின் உரித்தாளர்கட்குமுரியவாதனம் இதில் மேற்செல்லைக் காணிக்குப் போகும் வழிவாய்க்கால் பிறநீங்கலாக மிகுதியடங்கலும்.

2. ஷை சங்கானைக்கோயிற்பற்று சங்கானையிறை "குதிரைவிழுந்தான்" பர. நெ. இல. ஏழேமுக்கால் ($7\frac{3}{4}$) வடகிழக்கு மூலையில் இருக்கும் கிணற்றுப் பாகமும் எல்லைகிழக்குதாமோதரம்பிள்ளை பெண் பொன்னம்மாவிற்குரிய வாதனம் வடக்கு ஆறுமுகம் கணபதிப்பிள்ளைக்கும் பங்காளருக்குமுரியவாதனம் மேற்கு சின்னத்தம்பி தாமோதரம்பிள்ளைக்கும் பங்காளர்கட்கு முரியவாதமும் மேலே சொல்லப்பட்ட முதலாம் ஆதனமும் தெற்கு தம்பாபிள்ளை பெண் அன்னம்மாவிற்குரியவாதனமும் பண்டாரப்பிள்ளை சின்னத்தம்பிக்குரிய வாதனமும் இதில் சொல்லப்பட்ட கிணற்றில் மேலே சொல்லப்பட்ட முதலாம் ஆதனத்திற்கும் கீழ கூறப்படும் மூன்ரும் ஆதனத்திற்கும் மறு ஆதனங்கட்குமுரிய தண்ணீர் பாகமும் வழிவாய்க்கால் பாவிப்புருத்தும் பிறநீங்கலாக மிகுதியடங்கலும்.

3. ஷை பண்டத்தரிப்பு இறை "விளாப்புவயல்" பர. நெ. இல. பத்து (10) எல்லை கிழக்கு மேலே சொல்லப்பட்ட முதலாம் ஆத ஆதனம் வடக்கு அருணசலம் கைம் பெண் தெய்வானைக்குரிய வாதனம் மேற்கு நாகமணி பொன்னுச்சாமிக்குரிய வாதனம் தெற்கு அம்பலவாணர் சிவப்பிரகாசத்திற்கும் பங்காளருக்கும் பொன்னம்பலம் முருகேசுவிற்குமுரிய வாதனங்கள் மேலே சொல்லப்பட்ட இரண்டாம் ஆதனத்தில் இருக்கும் கிணற்றில் இதற்குரிய பாகமும் முதலாம் இரண்டாம் காணிகளின் வடக் கெல்லை யருகாக வழிவாய்க்கால் பாவிப்புரித்தும் இதடங்கலிற் சொரியலாய் 2/3 பாகம்.

4. ஷை பண்டத்தரிப்பு இறை "விளாப்புவயல்" பர. நெ. இல. ஏழரை ($7\frac{1}{2}$) எல்லை கிழக்கு எதிராளிக்குரியவாதனம் வடக்கு சங்கானை கிராம எல்லையாயிருக்கும் சின்னத்தம்பி தாமோதரம்பிள்ளைக்குரியவாதனம் மேக்கு சரவணமுத்து இரத்தினத்தின் உரிமைக் காரருக்குரிய வாதனம் தெற்கு அண்ணுமலை கைம்பெண் செல்லம்மாவின் ஆட்சியிலிருக்கும் ஆதனம்.

5. ஷை பண்டத்தரிப்புக்கோயிற்பற்று சில்லாலை யிறை "அறுகம்பிட்டி வெள்ளை மணற்பிட்டி" ஏக்கர் மூன்று (3) றூட் ஒன்று (1) போட்ஸ் முப்பத்து மூன்று (33) தென்னைகள் பனைகளும் மற்றும் செய்பயிர் வான் பயிர்களும் எல்லைகிழக்கு ரோட்டருகால் விடப்பட்டநிலம் வடக்கு செவைத்தி பேதுறுவுக்கும் பங்காளருக்குமுரிய வாதனம் மேற்கு அந்தோனிப்பிள்ளை சந்தியாவின் உரிமைக்காரருக்குமுரியவாதனம் தெற்கு P. P. 68 இலக்கமுள்ள அளவு படத்தில் 467ம் இலக்கத் துண்டுக்காணி இதடங்கலும்.

1957 ஹூ கார்த்திகைமீ 26உ

வை. ஏரம்பமூர்த்தி,
கொம்மிஷனர்,
காரைநகர்,
M 176 6-12

## தேகவியோகம்

சைவப்பிரகாசயந்திரசாலையில் அலுவலர் தலைவராய்க் கடமையாற்றும் திரு. நாகலிங்கம் மயில்வாகனம் அவர்களின் மாமனர் மானிப்பாய் திரு. ஆறுமுகம் அரியகுட்டி அவர்கள் சிறிது நோய்வாய்ப்பட்டிருந்து சென்ற திங்கட்கிழமை அவருடைய அறுபத்தைந்தாம் வயசில் இவ்வுலக வாழ்வை நீத்தார். அடுத்தநாளாகிய செவ்வாய்க்கிழமை அவருடைய ஈமக்கிரியைகள் பலசுற்றமித்திரர் முன்னிலையிற் சைவமுறைப்படி சிறப்பாக நடைபெற்றன. இறைவன் திருவருளால் அன்னர்ஆன்மா சாந்தியடைவாராக.

## கோட்டு விற்பனவு விளம்பரம்

இல. M. B, 1699
சின்னையா கயிலாயபிள்ளை
கோப்பாய் தெற்கு
வழக்காளி

எதிர்

சோதி நாகரத்தினம் பெண் அகிலாண்ட நாயகி விக்ரோறியா ரோட்டு யாழ்ப்பாணம்
எதிராளி

யாழ்ப்பாணம் பெரிய கோட்டின் M B 1699–ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக்கட்டளைப்படி பின்னுல் விபரிக்கப்படும் ஒரு துண்டுக் காணி 1958 ஹூ தை மீ 18உ சனிக்கிழமை பிற்பகல் 4–30 மணி தொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத்தொகை ரூபாய் 1790 வளக்கு வைத்த நாள் துவங்கி தீர்வைத் திகதி வரைக்கும் முதல் பணம் 1000 த்துக்கும் எட்டுவீத வட்டியும் சேர்த்து முழுத்தொகைக்கும் பணம் கொடுக்கும் வரை 5 வீதவட்டியும் கோட்டுச்செலவு ரூபா 189-04.

### காணிவிபரம்

யாட்பாணம் கோப்பாய் சேர்ந்த இருபாலையில் "காரைப்பிட்டிக் குளவயல்" என்னும் காணி நெ இ 48 1/4 உறுதியின்படி

எல்லை கிழக்கு தண்ணீர் வாய்க்காலும் சிதம்பர அம்பலவாணர் சுவாமி கோயிலுக்குரிய ஆதனமும்,

வடக்கு குளமும், வாய்க்காலும்,

மேற்கு சோமசுந்தரம் பழனிபப்பாவின் உருத்தாளரும் பங்காளரும்,

தெற்கு குமாரசுவாமி முதலிபார் கதிர்வேல்பிள்ளையும் சின்னவி கணபதிப்பிள்ளையும்.

இவை அடங்கிலும்.

வ. அ. துரையப்பா
கொமிஷனர்.

பாழ்ப்பாணம்
1-12-57.
M, 173 6-12-57,

# கந்தபுராணப் பூர்த்திப் படிப்பு

## வள்ளியம்மை திருமணப் படலம்

யாழ்ப்பாணம் சைவபரிபாலனசபையாதரவில் சென்ற பங்குனி மீ உத்தரத்திலன்று நாவலர் மண்டபத்தில் ஆரம்பிக்கப்பட்டு தினமும் நடைபெற்று வந்த கந்தபுராணப் படிப்பின் பூர்த்திப்படிப்பு (வள்ளியம்மை திருமணப் படலம்) நிகழும் கார்த்திகை மாதம் உகூஉ (11-12-57) புதன்கிழமை இரவு திருவருளை முன்னிட்டு இரவு 7 மணிக்கு ஆரம்பமாகி நடைபெறும். புலமை வாய்ந்த பெரியோர்கள் பாக்களுக்கு உரை கூறுவார்கள். விசேஷ பூசையும் நடாத்தப்பெறும்.

[பகல் சிவப்பிராமணர்கள் சிவபூசை செய்வார்கள். அதன்மேல் அவர்களுக்கு சமாராதனை நடைபெறும்.]

சைவாபிமானிகள் யாவரும் சமுகமளிப்பார்களாக

மு. மயில்வாகனம்
சமயப்பிரசார அமைச்சர்

சைவபரிபாலன சபை
யாழ்ப்பாணம்
4—12—57


கோட்டை அடையாள
இரட்டைப் பீலி

# வீட்டு ஓடுகள்

## திறமானதிலும் திறமானது

உறுதிக்கும் நம்பிக்கைக்கும் ஒப்பில்லாதது. பெருமழையில் மிகச் சிறிய அளவுநீரை உறிஞ்சுகின்றது. மழை காலத்தில் தண்ணீர் சிறிதாயினும் ஒழுகமாட்டாத வகையில் அமைக்கப்பட்டுள்ளது.

இதை உபயோகிக்கும் பெருந்தொகையினரின் அபிப்பிராயத்தைக் கேட்டறிக,

நீண்டகால உபயோகத்தில்
திறமானபொருளே மலிவானதாகும்

வில்லியம் மேதர் சன்ஸ்
சோல் ஏஜென்ஸ் யாழ்ப்பாணம்


## உலக அழிவை ……

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

பொருள் கொள்ள வேண்டாம். மனித வாழ்க்கையின் முடிந்த குறிக்கோள் செல்வ வளந்தான் என்று கருதிவிடக்கூடாது. சிறந்த நற்பயனை அடைவதற்குரிய சாதனமாகச் செல்வத்தை மக்கள் கருத வேண்டும். அதுதான் ஆன்மீக நெறி'

(வரும்)

## கோட்டு விற்பனவு விளம்பரம்

=0=

யாழ்ப்பாணம்
டிஸ்திறிக் கோட்டில்

அனலைதீவு வேலுப்பிள்ளை சண்முகம் வழக்காளி
இல. M. B. 822.

எதிராக

அனலைதீவு சபாபதிப்பிள்ளை கணபதிப்பிள்ளை எதிராளி

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டின் M B 822ம் இலக்க வழக்கில் எனக்குக்கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி பின்னுல் விபரிக்கப்படும் ஒரு துண்டுக்காணி 1958ம் ஹூ தை மீ 24ம் திகதி சனிக்கிழமை முற்பகல் 11-30 மணி தொடக்கம் அந்தந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத்தொகை;—வட்டி முதல் ரூபா 2531/50ம் ரூபா 1750கது 14-2-56 தொடக்கம் 24-4-57 வரை 12 வீதமான வட்டியும் அதன்மேல் முழுத்தொகைக்கும் இறுக்கும்வரை 5 வீதமாணவட்டியும் கோட்டுச்செலவு ரூபா 197/82 சதம்.

### காணிவிபரம்

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் •தீவுப்பகுதி அனலைதீவுக் கோவிற்பற்று அனலைதீவு இறை "சுடலைப்புலம்" பர. நீ. இல. ஆறு (6) செய்பயிர் வான் பயிர்களும் கடையும் எல்லை கிழக்கு தம்பியப்பா பெண் நாகம்மாவிற்குரியவாதனம் வடக்கு கணபதிப்பிள்ளை பெண் நாகரெத்தினத்திற்குரியவாதனம்மேற்கு ரோட்டு தெற்கு ஒழுங்கை இதன் பதிவு C 170/136.

காரைநகர்.
1957–ம் ஹூ கார்த்திகைமீ 16ந் உ

வை. ஏரம்பமூர்த்தி
கொம்மிஷனர்.
M 175, 6-12-57,

# அடைவுநகை விற்பனவு விளம்பரம்

———:0:———

அரசாங்க உத்தரவுடன் அடைவு பிடிக்கும் யாழ்ப்பாணம் பழ. சோம. கைலாசநாதன் செட்டியார் அடைவுகடையில் அடைவு வைக்கப்பட்டு தவணை தப்பி மீட்கப்படாதிருக்கும் கீழ்க்காணும் நகைகள் 23-12-57 சனிக்கிழமை காலை 10 மணி தொடக்கம் பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

| நம்பர் | உமீஹூ | கொடுத்தரூபா | ஊர் | பெயர் | நகைவிபரம் |
|---|---|---|---|---|---|
| 3924 | 12-1-53 | 40 | மேலணை மேற்கு | ஆறுமுகம் குணசிங்கம் | இ. மி. வெ, கல் காதோலை சோடி 1 |
| 3978 | 22-1-53 | 260 | கந்தர்மடம் | ஆறுமுகம் சிவசோதி | இரட்டைப்பட்டு மணிமாலை 1ம் ரேடியோ வளையல் சோடி 1ம் |
| 4470 | 26-1-53 | 20 | இணுவில் | மிஸஸ் சபாபதி | இ மி. கல் மோதிரம் 1 |
| 4569 | 30-7-53 | 40 | திருநெல்வேலி கிழக்கு | வல்லி நாகலிங்கம் | கிளாவர்மோதிரம் 1 |
| 4781 | 18-9-53 | 20 | 19, ஸ்டான்லி ரோடு | P. V. தாஸ் | கிளாவர் மோதிரம் 1 |
| 5114 | 15-12-53 | 20 | இளவாலை | சூசை சேவியர் | மோதிரம் 1 |
| 5863 | 3-6-54 | 30 | கொக்குவில்மேற்கு | நவரெத்தினம்யோகரெத்தினம் | பெட்டிமோதிரம்1 |
| 6294 | 18-10-54 | 40 | வட்டுக்கோட்டை | செல்லத்துரை தருமலிங்கம் | இ மி கல் சிட்டி 1 |
| 6448 | 6-11-54 | 20 | புங்குடுதீவு | சண்முகம் சரவணமுத்து | இ மி. கல் திருகுப்பூ 1 |
| 6792 | 31-1-55 | 125 | யாழ்ப்பாணம் போலீஸ் ஸ்டேஷன் | H. M. D. W. குணதிலக | பண்டா முடிச்சுச் செயின் 1 |
| 7039 | 15-3-55 | 200 | வவுனியா | அரசன் கருப்பையா | இ மி சி கல் பதைக்கத்துடன் மூன்று குண்டு அட்டியல் 1 |
| 7267 | 25-5-55 | 120 | மானிப்பாய் வடக்கு | ஆறுமுகம் வேலுப்பிள்ளை | இ மி கல் புரோச்சு1ம் கொ. புரோச் 1ம் |
| 8303 | 19-4-56 | 50 | நவாலி தெற்கு | S. P. பேரின்பநாயகம் | நெளி வளையல் சோடி 1 |
| 8805 | 29-9-56 | 80 | நாவாந்துறை | நீக்கிலான் மரியார் | நெளிவளையல் சோடி 1 |
| 8825 | 5-10-56 | 80 | நாரந்தனை | இலங்கைநாதர் பாலசுப்பிரமணியம் | ஆயில் கல் பெண்டன் கோர்த்த செயின் 1 |
| 9031 | 14-10-56 | 120 | திருநெல்வேலிதெற்கு | குமாரவேலு வல்லிபுரம் | இமி முத்து பெண்டன்1 |
| 9093 | 14-10-56 | 45 | இணுவில் 4 ம் கட்டை | வல்லிபுரம் பரமு | பளிங்குக் கல் பெண்டனுடன் செயின் 1 |

28-12-57 க்குச் சரியான ஏவிளம்பி ஹூ மார்கழி மீ 13 உ சனிக்கிழமை காலை 10 மணியளவில் எடுபட்ட நகை புறநீங்கலாக மீதி என்னுல் பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

சி. பசுபதிச்செட்டியார்
வெந்திஸ் மேஸ்தர், 3-12-57,

M, 174 6, 13-12-57,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆறுமுகநாவலர் குருபூசை

திருவருளை முன்னிட்டு யாழ்ப்பாணம் சைவபரிபாலன சபையாதரவில் நிகழும் ஏவிளம்பி வருஷம் கார்த்திகை மாதம் உஎ-ந் திகதி (12-12-57) வியாழக்கிழமை சபை நாவலர் மண்டபத்தில் ஆறுமுகநாவலர் குருபூசை கீழே காணப்படும் முறைப்படி நடத்தப்பெறும்.

## நிகழ்ச்சிகள்

மு. ப. 10 — பி. ப. 1 மணிவரை
கடவுளாராதனை, தேவாரம் ஓதுதல்,
நாவலர் சரித்திரம் படித்தல். மாகேசுர பூசை

மாலை ஆறு மணிக்கு வடமாகாண வித்தியாதிகாரி
திரு. சி உ. சோமசேகரம் M. A. (Education)
அவர்கள் தலைமையில் விரிவுரைக்கூட்டம் நடைபெறும்.

மாலை 6—7 தமிழ்மறையோதல்
சங்கீதபூஷணம் திரு. க இ. நடராசனும் கோஷ்டியாரும்
இரவு 7 விரிவுரைகள்
1 தலைவர் முன்னுரை
2 'நாவலரும் சைவமும்'
திரு. மு. ஞானப்பிரகாசம் அவர்கள் B. A., B. Sc.
3 'நாங்கள் செய்த தவம்'
வித்துவான் பொன். முத்துக்குமாரு அவர்கள் B. O. L.
4 நன்றி கூறுதல்

**மு. மயில்வாகனம்**
சமயப் பிரசார அமைச்சர்

சைவபரிபாலன சபை
யாழ்ப்பாணம்
4-12-57.


யாழ்ப்பாணம்

## ஐக்கிய இலாபநிதி

1918-ம் ஆ ஸ்தாபிதமானது

வங்கிக்காரர் மூலநிதி 8 லட்சம் ரூபா.
இதுவரையிற் கொடுக்கப்பட்ட பங்குப்பணம் ரூபா
**616313,00**
100 ரூபா விகிதமான 8000 பங்குகள்
பங்குப்பணங்கட்டுமுறை.

மாசமொன்றுக்கு 1 ரூபா விகிதமாக 80 மாச காலத்திற்கு மாசந்தோறும் கட்டப்படவேண்டியது. குறித்த காலமுடிவில் பங்கொன்றுக்கு ரூபா 100 திருப்பிக் கொடுக்கப்படும். பங்குகள் எந்த நேரமும் வாங்கலாம்,

தினசரிப் பற்றுவரவு.

எச்சநிதி சராசரி 500 ரூபாவுக்குக் குறையாமல் இருக்குமானல் ஒருவிகித வட்டியுடன் தினசரிப் பற்றுவரவு செய்யலாம்.

தவணை வரையறுக்கப்பட்ட க்ஷேமப் பணம்

க்ஷேமப்பணம் 3 மாசம், 6 மாசம், 9 மாசம், 12 மாசம் என்னும் காலங்கள் வரையறுத்து ஏற்படும் வட்டியும் முறையே 1 விகிதம், 2 விகிதம் 4 விகிதம் 6 விகிதமாகக் கொடுக்கப்படும்

உண்டியல்கள்

கொழும்பிலுள்ள "நாஷனல்" வங்கியிலும் "இம்பீரியல்" வங்கியிலும் இந்தியாவிலுள்ள பிரதான பட்டினங்களிலும் மாற்றததக்கவிதமாகக் கொடுக்கப்படும். தொடுவாய் இராச்சியப் பகுதியிலுள்ளவர்களுக்குக் கொடுக்கவும் வாங்கவுமான விசேஷ ஒழுங்குகள் செய்யப்பட்டிருக்கின்றன.

கடன்

நகைகள் ஈடு வைத்துக்கொண்டு கடன் கொடுக்கப்படும். முதலையும் பாகம் பாகமாகக் கொடுக்கலாம்.

இன்னும் வேண்டிய விபரங்களை
என் மூலமாக அறிந்து கொள்ளலாம்

**S. கனகசபை**
சிருப்பர்

Std 14






## முத்திசாதன முறை

இது
கர்மயோகம், பக்தியோகம்,
இராஜயோகம், ஞானயோகம்
என்பனவற்றைத்
தெளிவாக விளக்குவது
**20** அத்தியாயம்,
**264** பக்கம்.

விலை ரூபா 1/—

அதிபர்:
"இந்துசாதனம்"
யாழ்ப்பாணம்.


### பள்ளிக்குழந்தைகளுக்கு இலவச பயணம்

'பஞ்சாப்' மாகாணத்திலே அரசினருக்குச் சொந்தமான 'பஸ்' வண்டிகள் ஓடுகிற எல்லா இடங்களிலும் பள்ளிக் குழந்தைகள் பள்ளிக்கூடங்களுக்குச் செல்லும்போதும், பள்ளிக்கூடம் முடிந்து வீடுகளுக்குத் திரும்பும்போதும் நாள்தோறும் அவர்களை இலவசமாக ஏற்றிச் செல்லப் 'பஞ்சாப்' அரசு ஏற்பாடு செய்துள்ளது. பன்னிரண்டு வயது வரையுள்ள குழந்தைகளுக்கே இந்த வசதி அளிக்கப்படும். [இலங்கை அரசும் இதனைச் சிந்திக்கும் போலும்.]

### சைவப்பிரசங்கம்

நிகழும் கார்த்திகைமீ 7உ 21-11-57 வெள்ளிக்கிழமை இரவு 7மணிவரையில் யாழ்ப்பாண நகரக் கூட்டுப்பிரார்த்தனைச்சங்க ஆதரவில் சைவப்பிரசாரகர் திரு. பொன் அப்புக்குட்டி அவர்கள் "நாம் ஏன் பிறந்தோம்" என்னும் பொருள் பற்றிப் பேசும்போது நாம பிறந்தது கடவுளை வணங்கி முத்தியடையவே. நாம்செய்த புண்ணியத்தினலே முத்திதரும் தெய்வச் சபையைக் காண்பிக்க வழிகாட்டும் சைவசமயத்தை மேற்கொண்டு வாழும் நற்குடிகளிற் பிறந்தோா இத் தருணத்தை இழந்துவிடாது தெய்வ வழிபாட்டை மேற கொள்ள வேண்டும். கூட்டுப்பிரார்த்தனையில் பவநெறிக்குவிலக்காகும் தேவார திருவாசகம் திருப்புகழ்களையே காதலாகிக் கசிந்து கண்ணீர்மல்கி நாத்தழும் பேற ஓதல் வேண்டும். செல்வமும் யாக்கையும் இழமையும் நிலையா. இன்னே ஆவன செய்து சமய தீக்கைபெற்று இம்மை மறுமை இன்பங்களை ஆக்கி முத்தியளிக்கும் சிவபுண்ணியமும் இறப்பில் தவமுமாம். சரியை கிரியை யோகஞ் செய்து ஞானமடைந்து இறவாத இன்ப நிலைபெற்றுய்வோமாகஎன்று கூறினர்.


ஆசிரியர்க்கும்
ஆசிரிய மாணவர்க்கும் உரிய
அரிய நூல்!
**படிப்பிக்கும் முறைகளும் விதிகளும்**

சைவத் திருவாளர்
சு. சிவபாதசுந்தரம்பிள்ளை
B. A. அவர்கள் இயற்றியது
புதுக்கிய இரண்டாம்பதிப்பு.
விலை: ரூபா 3-00
அதிபர்:
'இந்துசாதனம்'
யாழ்ப்பாணம்.



## ஜீ. ஸீ. ஈ. இலக்கியம்

திருவிளையாடற்புராண வசனச்சுருக்கம்
அரும்பதவுரை, செய்யுள்உரை முதலியவற்றுடன்.
விலை சதம்: 50.
மனேஜர், 'இந்துசாதனம்' யாழ்ப்பாணம்.



சைவபரிபாலன சபையார் வெளியிட்ட

## உபவாசகங்கள்

அரசினரால் அங்கிகரிக்கப்பட்டன

### பால கதாவாசகம்

( சித்திர விளக்கப் பதிப்பு )

ஆசிரியர்
பண்டிதர் ம. வே. திருஞானசம்பந்தப்பிள்ளை

**பாலகதாவாசகம்**

| | | |
|---|---|---|
| நான்காம் புத்தகம் | ... விலை சதம் | 80 |
| மூன்றும் புத்தகம் | ... விலை சதம் | 65 |
| இரண்டாம் புத்தகம் (அச்சில்) | ,, ,, | 50 |
| இலக்கிய வாசகம் மூன்றும் புத்தகம் | ,, | |
| (அரிச்சந்திரன் கதையும் பஞ்சதந்திரச் செய்யுளும்) | ... விலை சதம் | 65 |


## பெருநிலக்கிழார் வைதீகசிகாமணி இராயபகதூர் ஸ்ரீமத் கோ. இராசகோபாலபிள்ளை

———:0:———

ஸ்ரீ இராசகோபாலபிள்ளையவர்களின் முன்னோர்களுள் ஒருவர் சாமுசித்தராக (சிவஞானி) வாழ்ந்தவர். இத்தகைய குடும்பத்தாரோடு எங்கள் சிவபாதரையா அவர்களின் பிதாவாகிய ஆசிரியர் திரு சுப்பிரமணிய தொண்டர் நட்புரிமை பூண்டார்கள். அப்போது இரு குடும்பத்தினருக்கும் பிரியா நட்புரிமை ஏற்பட்டது. ஸ்ரீ இராஜகோபாலபிள்ளையவர்கள தமது ஆனந்தவிலாசமாளிகைக்கு சிவபாதசுந்தரரை அழைப்பித்து நன்கு உபசரித்து அவரை நாவலர் பெரியாரின் வழிக்குருவாய் மதித்துச் சிவஞான சித்தியாருக்குப் பொருள் கேட்டுத் தெளிந்தார். பிள்ளையவர்கள் அடியார் சிவபக்திகளிற் சிறந்தவர். சைவக் கொடைவள்ளல், சிவதருமசீலர், அநுபூதிச் செல்வர், சிவபூசாதுரந்தரர், வைதிக சைவப் பழம், சைவ நூல்களைப் பதிப்பித்து வெளியிட்ட நற்றகையார். தமிழ் சம்ஸ்கிருதம் இரு பாஷை நூல்களையும் நன்கு படித்த தவச் செல்வர். கற்றதைக் கற்றபடி ஒழுகும் உத்தமர்.

இப்பெரியார் பரம்பரைச் சைவக் கார்காத்த வேளாண்குலதிலகர். திருவாரூரைப் பிறப்பிடமாகக் கொண்டவர். வேளாண்மைத் தொழிலில் மிக்க பற்றுடையவர். "திருவாரூர்ப் பிறந்தார்கள் எல்லார்க்கும் அடியேன்" என்று சுந்தரமூர்த்தி சுவாமிகள் பாராட்டிய இத்திருவாரூரில் பிள்ளையவர்கள் பிறந்து அங்கேயே தேகத்தை நீத்து ஆனந்தத் தாண்டவம் புரியும் தியாகராசப் பெருமானின் திருவடியிற் கலந்தனர்.

— செ. கோ. —

வான்முகில் வழாதுபெய்க மலிவளஞ் சுரக்க மன்னன்
கோன்முறை யரசுசெய்க குறைவிலா துயிர்கள் வாழ்க
நான்மறை யறங்களோங்க நற்றவம் வேள்வி மல்க
மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்


யாழ்பாணம் சைவபரிபாலனசபையாருக்காக, வண்ணார்பண்ணை காங்கேசன் துறைவீதி 450-ம் இலக்கத்திலுள்ள, சைவப்பிரகாச யந்திரசாலையில், யாழ்ப்பாணம் நாவலர்வீதி 245-ம் இலக்கத்தில் வசிக்கும்திரு, சுப்பையா பொன்னம்பலம் கந்தையாஅவர்களால் 6-12-57 வெள்ளிக்கிழமை அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

ஆசிரியர்: நம. சிவப்பிரகாசம்


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org